**FIRST INFORMATION REPORT**
**முதல் தகவல் அறிக்கை**
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8093801

1. District : மாவட்டம் கரூர் | PS: காவல்நிலையம் கரூர் ஊ.த.க.பிரிவு | Year: ஆண்டு 2019 | FIR No.: மு.த.அ. எண் 01/19 | Date: நாள் 30.01.19

2. (i) Act சட்டம்: ஊழல் தடுப்புச் சட்டம் [AMENDMENT] 2018 Sections பிரிவுகள்: 7(a)
   (ii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
   (iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : - குற்ற நிகழ்வு நாள் | Date from : நாள் முதல் 29.01.19 | Date to : நாள் வரை
   Time Period : நேர அளவு | Time from : நேரம் முதல் 13.00 HRS | Time to : நேரம் வரை
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 30.01.19 | Time : நேரம் ~~18.00~~ 16.00 HRS.
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் VOL : 01. | Time : நேரம்

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்ட மனு.

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் சுமார் 12 km வடகிழக்கு
   Beat Number : முறைக் காவல் எண் | (b) Address : முகவரி வாங்கல் காவல் நிலையம். கரூர் நகர உட்கோட்டம், கரூர்
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் | District : மாவட்டம் —

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் S. நவீன் | (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் சுப்ரமணியம்.
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 21.06.1990 | (d) Nationality : நாட்டினம் இந்தியன் | (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண் —
   Date of Issue : வழங்கப்பட்ட நாள் — | Place of Issue : வழங்கப்பட்ட இடம் —
   (f) Occupation : தொழில் EMPLOYEE IN PRIVATE CONCERN | (g) Address : முகவரி 148, அய்யம்பாளையம், தோட்டக்குறிச்சி (PO) மண்மங்கலம், கரூர்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
   ரகுபதி, காவல் உதவி ஆய்வாளர்
   வாங்கல் காவல் நிலையம். கரூர் நகர உட்கோட்டம்
   கரூர்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
   தாமதம் இல்லை

* GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

கனம் தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் மற்றும் சிறப்பு நீதிபதி, கரூர் அவர்கள் முன்பாக பணிந்து சமர்பிக்கப்படுகிறது.

கரூர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு காவல் ஆய்வாளராகிய நான், 30.01.2019 அன்று மாலை சுமார் 16.00 மணியளவில் அலுவலகத்தில் பணியில் இருந்தபோது, கரூர் மாவட்டம், மண்மங்கலம் வட்டம், தோட்டக்குறிச்சி அஞ்சல், அய்யம்பாளையத்தை சேர்ந்த சுப்ரமணியம் மகன் நவீன் என்பவர் கொடுத்த புகார்மனுவை பெற்று, அந்த புகார் குறித்து, புகார் மனுவில் கூறப்பட்டுள்ள, கரூர் மாவட்டம், வாங்கல் காவல் நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளராக பணிபுரியும் திரு.ரகுபதி மற்றும் புகார்தாரர் திரு.நவீன் ஆகியோர்களின் முன் நடத்தைகள் பற்றி ரகசியமாக விசாரணை செய்ததில், புகார்மனுவில் கூறப்பட்டிருந்தபடி, புகார்தாரர் திரு.நவீனிடம் எதிரி திரு.ரகுபதி, கையூட்டாக பணம் கேட்டுள்ளார் என்பதற்கான முகாந்திரம் இருப்பதாக தெரியவந்தது. ஆகையால் புகார்தாரரின், புகார்மனுவின் பேரில் வழக்கு பதிவு செய்ய, காவல் கண்காணிப்பாளர், தென்சரகம், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, சென்னை அவர்களின் அனுமதி பெற்று, இன்று 30.01.2019 ஆம் தேதி, மாலை 18.00 மணிக்கு

(தனித்தாள் இணைக்கப்பட்டுள்ளது)

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..................... Rank ..................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS..............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................ பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு
[signature] 30/01/19

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்
[signature] 30.1.19

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
30.1.19. 19.00hrs

Name: பெயர் M. REKAA,
Rank: நிலை ....................No. எண் ..........
Inspector of Police
VAC, Karur.

GCP-240-34(Type 2) 90,000 Cps -21 3 ...HCL-12)p 2

**கரூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.01/2019—இன் முதல் தகவல் அறிக்கை தொடர்ச்சி.......**

கரூர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.01/2019 சட்டப் பிரிவு 7(a) ஊழல் தடுப்புச் சட்டம் (Amendment) Act 2018—ன்படி வழக்கு பதிவு செய்தேன். புகார்மனுவின் விபரம் பின்வருமாறு: கரூர் 30.01.2019 அனுப்புநர் சு.நவீன், த/பெ. சுப்ரமணியம், எண்.148, அய்யம்பாளையம், தோட்டக்குறிச்சி அஞ்சல், மண்மங்கலம் வட்டம், கரூர் மாவட்டம். பெறுநர் காவல் ஆய்வாளர் அவர்கள், லஞ்ச ஒழிப்புத் துறை, கரூர். ஐயா, நான் மண்மங்கலம் வட்டம், தோட்டக்குறிச்சி அஞ்சல், அய்யம்பாளையத்தில் எனது குடும்பத்துடன் வசித்து வருகிறேன். நான் B.com., படித்துள்ளேன். நான் ஈரோட்டில் உள்ள கனகமலை இன்ஜினியரிங் கம்பெனியில் சூப்பர்வைசராக வேலை பார்த்து வருகிறேன். கடந்த 20.01.2019 அன்று நான் என் தாயாருடன் எனக்கு கம்பெனியால் வழங்கப்பட்ட இரு சக்கர வாகனம் TN33 BM 9939 என்ற Hero Splender Plus-இல் ஆத்தூரிலிருந்து அய்யம்பாளையம் நோக்கி செல்லும் வழியில் கள்ளிபாளையம் என்ற இடத்தில், மாலை சுமார் 4.30 மணிக்கு ரோட்டின் இடதுபுறமாக சென்றபோது, திடீரென முதியவர் ஒருவர் ரோட்டை கடந்து வேகமாக நடந்து வந்தார். நான் அப்பொழுது எனது இரு சக்கர வாகனத்தை நிறுத்த முயற்சித்தபோது, முடியாமல் அந்த முதியவர் மீது எனது இரு சக்கர வாகனம் மோதியதில், அந்த முதியவருக்கு உதடு மற்றும் நெற்றியில் காயம் ஏற்பட்டு, அதே இடத்தில் கீழே விழுந்தார். உடனே நான், அந்த வழியாக சென்ற ஒரு காரை நிறுத்தி அந்த முதியவரை அழைத்துச் கொண்டு, கரூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்த்துவிட்டு, அவர் பெயர் குறித்து விசாரிக்க, அவர் தனது பெயர் வீரமலை என்றும், தான் கள்ளிப்பாளையத்தில் வசிப்பதாகவும், தன் மகன் பெயர் பெரியசாமி என்றும் தெரிவித்தார். சிறிது நேரத்தில் தகவல் தெரிந்து, அங்கு வந்த அவர் மகன் பெரியசாமியிடம், என்னுடைய பெயர் மற்றும் விபரங்களை தெரிவித்துவிட்டு, நான் புறப்பட்டு சென்றுவிட்டேன். பின்னர் கடந்த 23.01.2019 ஆம் தேதி கரூர் வாங்கல் காவல் நிலையத்திலிருந்து என்னை அழைத்ததன்பேரில், நான் வாங்கல் காவல் நிலையத்திற்கு மதியம் சுமார் 2 மணியளவில் சென்று, அங்கிருந்த எஸ்.ஐ. திரு.ரகுபதியை பார்த்தபோது, அவர் என்னிடம் விபத்து குறித்து விசாரித்துவிட்டு, முதியவரின் மகன் பெரியசாமி கொடுத்த புகாரின்பேரில் என்மீது, வாங்கல் காவல் நிலைய குற்ற எண்.24/2019—இல் வாகன விபத்து வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளதாக தெரிவித்தார். பின்னர் என்னுடன் வந்த எனது மாமா திரு.பிரகாஷ் மற்றும் சகோதரர் திரு.கௌதம் ஆகியோரிடம் மேற்படி வழக்கிலிருந்து ஜாமினில் விட கையெழுத்து வாங்கிக்கொண்டு என்னை ஜாமினில் விடுவித்தார். எனது Hero Splender Plus TN33 BM 9939 என்ற வாகனத்தை எம்.வி இன்ஸ்பெக்சனுக்கு அனுப்பவேண்டும் என்று கூறி, எனது வண்டியும் அதன் சாவியையும் வாங்கிக்கொண்டு, என்னை 25.01.2019 அன்று வந்து பார்க்குமாறு கூறினார். அதன்படி நான், 25.01.2019 அன்று மதியம் சுமார் 1 மணியளவில் வாங்கல் காவல் நிலையம் சென்று, அங்கிருந்த எஸ்.ஐ. திரு.ரகுபதி அவர்களை சந்தித்தபோது,

அவர் தற்போது தான் அரசு ஊழியர்கள் வேலை நிறுத்தம் காரணமாக கூடுதல் வேலையாக இருப்பதாகவும், பின்னர் **28.01.2019** அன்று வந்து என்னை பார்க்குமாறு கூறினார். அதன்படி நான் **28.01.2019** அன்று மதியம் சுமார் **3** மணியளவில் வாங்கல் காவல் நிலையம் சென்றபோது, அங்கிருந்து காவலர் ஒருவர், எஸ்.ஐ. திரு.ரகுபதி, அரசு ஊழியர்கள் வேலை நிறுத்தப் பணிக்கு சென்றிருப்பதாகவும், நாளை வந்து பார்க்குமாறு கூறினார். அதன்படி நான், **29.01.2019** அன்று மதியம் சுமார் **1** மணியளவில் வாங்கல் காவல் நிலையம் சென்று, அங்கிருந்த எஸ்.ஐ. திரு.ரகுபதி அவர்களை சந்தித்தபோது, அவர் என்னிடம் உனது Hero Splender Plus–ஐ எம்.வி இன்ஸ்பெக்சனுக்கு அனுப்பவேண்டும் என்றால், தனக்கு தனியாக ரூபாய் **3000** கொடுத்தால் உடனே ஏற்பாடு செய்கிறேன் என்று கூறினார். அதற்கு நான், மேற்படி முதியவர் ரோட்டில் திடீரென குறுக்கே வந்ததால்தான் இந்த விபத்துசார், இந்த வழக்கே என்மேல் தேவையில்லாம போட்டு இருக்கீங்க, நான் வேலைக்கு ஒருவாரமா போகமுடியல, இந்த ஒருவாரத்திற்கும் எனக்கு சம்பளம் கிடையாது, என்கிட்டேயே பணம் கேட்கிறீங்களே என்று கூறி, என் வண்டியை சீக்கிரம் எம்.வி இன்ஸ்பெக்சனுக்கு அனுப்பங்கசார் என்று கூறினேன். அதற்கு அவர் என்னிடம், உன் வண்டிய எம்.வி இன்ஸ்பெக்சனுக்கு அனுப்பனும், அதுக்கு பிறகுதான் வண்டியை ரிலீஸ் பண்ண முடியும் என்றும், நான்கேட்ட பணமே குறைவாகதான் கேட்டிருக்கிறேன் என்று சொன்னார். நான் சற்று யோசித்ததும், எஸ்.ஐ. என்னிடம், சரி, நீ போயிட்டு ரூ.**3,000/–**த்தை எடுத்துக்கொண்டு நாளையோ, நாளை மறுநாளோ கொண்டுவந்து கொடு, நான் வேலையை முடித்து தரேன் என்று கூறினார். மேலும் எவ்வளவு சீக்கிரம் கொண்டுவந்து கொடுக்கிறாயோ அவ்வளவு சீக்கிரத்தில் வேலை முடியும் என்றார். நான் அப்போதைக்கு சரியென்று சொல்லிவிட்டு வந்துவிட்டேன். எனக்கு லஞ்சம் கொடுக்க விருப்பம் இல்லை, என்னிடம் ரூ.**3,000/–**ஐ லஞ்சமாக கேட்ட வாங்கல் காவல் நிலைய எஸ்.ஐ. திரு.ரகுபதி மீது நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக் கொள்கிறேன். இப்படிக்கு (sd) S.Naveen **30/01/19.** Sir, Submitted to the Court of the Hon'ble Chief Judicial Magistrate cum Special Judge for the PC Act, Karur. Received the report at 16.00 hrs on 30.01.2019 and made Preliminary Enquiry and registered a case in Karur V&AC Cr.No.01/2019 u/s 7(a) of the Prevention of Corruption (Amendment) Act 2018 at 18.00 hrs on 30.01.2019. (Sd) M.Rekha, 30.01.19, Inspector of Police, V&AC, Karur.

30.1.19.
M. REKHA,
INSPECTOR OF POLICE
V&AC, KARUR.